முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

# Provincial Department of Education - NWP

33 T I

## முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020

## First Term Test - Grade 10 - 2020

வரலாறு - I

பெயர் : ..................................... நேரம் : 01 மணித்தியாலம்

**கவனிக்க :**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- இலக்கம் 01 - 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1, 2, 3, 4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கம் உடைய வட்டத்திற்குள் ( X ) அடையாளமிடுக.

■ **மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**

(01) இறந்த காலத்தில் வாழ்ந்த மனிதன் பல்வேறு கால கட்டங்களில் எழுதி வைத்த நூல்களும் அறிக்கைகளும் எவ்வாறு அழைக்கப்படும்?

(1) இலக்கிய மூலாதாரம் (2) தொல்பொருள் மூலாதாரம்
(3) நாணய மூலாதாரம் (4) தொல்பொருள்கள்

(02) சில விடயங்கள் உள்ளடக்கப்படாமல் குறைபாடுகளைக் கொண்டு எழுதப்பட்டுள்ள இந்நாட்டு இலக்கிய மூலாதாரம் எது?

(1) மகாவம்சம் (2) தீபவம்சம்
(3) தூபவம்சம் (4) ரசவாஹினி

(03) மகாவம்சத்தின் முதலாம் பாகத்திற்கு விளக்கமளிக்கும் வகையில் பாளி மொழியில் எழுதிய ‘டீகாவ’ எனும் உரை நூலானது முதலாம் பாகம் எழுதப்பட்டு எத்தனை நூற்றாண்டுகளுக்குப் பின்னர் எழுதிய நூலாகும்?

(1) 4 நூற்றாண்டுகளின் பின்னர் (2) 3 நூற்றாண்டுகளின் பின்னர்
(3) 2 நூற்றாண்டுகளின் பின்னர் (4) 5 நூற்றாண்டுகளின் பின்னர்

(04) A- அரிஸ்டோடிலின் டிமுண்டோ
B- பிளினியின் நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா
C- இபின் பதூதாவின் தேசசஞ்சார அறிக்கை
D- பர்னாவோ குவேரோஸ் என்பவரின் இலங்கை பற்றிய அறிக்கை

இலங்கை பற்றிய விபரங்கள் அடங்கிய வெளிநாட்டு மூலாதாரங்கள் சில மேலே தரப்பட்டுள்ளன. இம் மூலாதாரங்களுக்குரிய நாடுகள் ஒழுங்குமுறைப்படி குறிப்பிட்டுள்ள விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

(1) உரோம், கிரேக்கம், போர்த்துக்கல், அரேபியா (2) கிரேக்கம், அரேபியா, உரோம், போர்த்துக்கல்
(3) போர்த்துக்கல், உரோம், கிரேக்கம், அரேபியா (4) கிரேக்கம், உரோம், அரேபியா, போர்த்துக்கல்

(05) பின்வரும் வெளிநாட்டு மூலாதாரங்களை எழுதியுள்ள எழுத்தாளர்களுள் இந்நாட்டுக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று எழுதியுள்ள எழுத்தாளரைத் தெரிவு செய்க.

(1) பிலிப்ஸ் பல்டியஸ் என்பவரின் இலங்கை பற்றிய நூல்.
(2) அருட்தந்தை பர்னாவோ குவேரோஸ் என்பவரின் இலங்கை பற்றிய அறிக்கை.
(3) பிளினியின் நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா.
(4) ஹியுங்சாங் பிக்குவின் தேச சஞ்சார அறிக்கை.

(06) பின்வரும் நாணயங்களுள் இந்நாட்டில் கிடைக்கப் பெற்ற மிகப் புராதன நாணயம் எது?

(1) யானை மற்றும் சுவஸ்திகா நாணயம் (2) கஹபண நாணயம்

(3) தம்பமஸ்ஸ நாணயம் (4) இலஷ்மி நாணயம்

(07) சாசனங்களும் அவை எழுதப்பட்டுள்ள பல்வேறு வகையான சாதனங்களும் பின்வரும் 'அ' மற்றும் 'ஆ' நிரல்களில் தரப்பட்டுள்ளன. அவற்றை இணைப்பதனூடாக பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. கல்வெட்டு | A. வல்லிபுரம் |
| 2. சுவர் | B. அம்பக்கை தேவாலய எழுத்து |
| 3. மரப்பலகை | C. கல்பொத்த கல்வெட்டு |
| 4. பொன்தகடு | D. சீகிரியா கவிதை |

(1) B C A D (2) C D B A (3) B A D C (4) C B A D

(08) பின்வரும் 'அ' மற்றும் 'ஆ' நிரல்களில் உள்ள தகவல்களை சரியாக இணைப்பதனூடாகப் பெறப்படும் விடையைத் தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. பிளினியின் நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா | A. கிரேக்க மூலாதாரம் |
| 2. அருட் தந்தை பர்னாவோ குவோரோஸ் | B. உரோம மூலாதாரம் |
| 3. ஹியுங்சாங் பிக்குவின் தேச சஞ்சார அறிக்கை | C. போர்த்துக்கேய மூலாதாரம் |
| 4. மெகஸ்தனிஸின் இண்டிகா | D. ஒல்லாந்து மூலாதாரம் |

(1) B A C D (2) B C D A (3) A D C B (4) D C B A

(09) இலங்கையில் பயன்படுத்தப்பட்ட புராதன நாணயம் ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. இதன் பெயர் யாது?



(1) அக எனும் பொன் நாணயம் (2) மத்தியகால கஹவனு நாணயம்

(3) தரண எனும் நாணயம் (4) தம்பமஸ்ஸ

(10) மூலாதாரங்களிலிருந்து விபரங்களைத் திரட்டி வரலாற்றை எழுதும் போது இறந்த காலத்தை சரியாகப் புரிந்து கொள்வதாயின் அம்மூலாதாரங்களை எவ்வாறு கையாள வேண்டும்?

(1) தர்க்க ரீதியாக சிந்தித்தல். (2) மனனமிடல்.

(3) எழுத்துருவாக்குதல். (4) வரலாறு பற்றி உறுதிப்படுத்தல்.

(11) இலக்கிய மூலாதாரமொன்றான நிக்காய சங்கிரஹய எனும் நூலில் எத்தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன?

(1) பொருளாதாரத் தகவல்கள் (2) அரசியல் தகவல்கள்

(3) புத்தசாசன வளர்ச்சி (4) இராசரட்டை வரலாற்றுத் தகவல்கள்

(12) களிமண்தட்டு, சுவர், செப்புத்தகடு, மரப்பலகை என்பவற்றில் எழுதி வைக்கப்பட்டுள்ளவற்றைக் குறிப்பிடப் பயன்படுத்தும் பொதுவான பெயர் யாது?

(1) சாசனங்கள் (2) பிராமியக் கல்வெட்டு

(3) குன்றுக் கல்வெட்டு (4) சுவர்க் கல்வெட்டு


(13) பெரகும்பா சிரித எனும் இலக்கிய நூல் எவ்வகையான மூலாதாரத்தைச் சேர்ந்தது?

(1) போர்க் காவியம் (2) தூது காவியம்

(3) புகழ் காவியம் (4) வீர காவியம்


kalvi.lk

(14) பின்வரும் இலங்கைப் படத்தினை அவதானித்து தாழ்நில உலர்வலயம், தாழ்நில இடை உலர் வலயம் என்பவற்றைக் குறிப்பிடும் எழுத்துக்களை ஒழுங்குமுறைப்படி தெரிவு செய்க.




(1) E உம் B யும் (2) B உம் C யும்
(3) C உம் D யும் (4) D உம் E யும்

(15) இலங்கையின் கற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்களைத் தீர்மானிக்கும் போது கருத்தில் கொள்ளப்பட்ட பௌதீகக் காரணி யாது?
(1) மண்ணின் தன்மை (2) காலநிலை
(3) வருடாந்த மழைவீழ்ச்சியின் அளவு (4) தரைத்தோற்ற வேறுபாடு

(16) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த மலையகப் பிரதேச வெட்டவெளி வேட்டை நிலங்கள் முறையே
(1) மினிஹாகல் கந்த, புத்தல (2) பண்டாரவளை, ஹோட்டன் சமவெளி
(3) சீகிரிய பொத்தான, அலிகல (4) பாகியங்கல, பட்டதொம்பலேன

(17) மரணித்தவரின் சடலத்தை தாம் வாழ்ந்த கற்குகையில் அடக்கம் செய்யும் சம்பிரதாயம் எந்த யுகத்தில் வாழ்ந்த மக்களிடம் காணப்பட்டது?
(1) கற்காலத்தில் ஆகும். (2) முன் வரலாற்றுக் காலத்தில் ஆகும்.
(3) வரலாற்றுக் காலத்தில் ஆகும். (4) விவசாயக் காலத்தில் ஆகும்.

(18) கற்காலத் தொழிநுட்பம் பற்றிய விபரமான அறிவினைப் பெற்றுக் கொள்ள இக்காலத்தில் பயன்படுத்திய எவ்வகையான கல்லாயுதங்கள் எமக்கு சான்றாக அமையும்?
(1) அம்மி (2) கற்பாறையால் செய்த கல்லாயுதம்
(3) பளிங்குப் பாறையால் செய்த கல்லாயுதம் (4) மணிகள்

(19) இலங்கையில் கற்காலத்தில் வாழ்ந்த மனிதர்களுக்கும் இன்றைய வேடர்களுக்குமிடையில் எத்தன்மைகள் சமமாகக் காணப்படுகின்றன?
(1) பொருளாதாரம் மற்றும் தொழிநுட்பம் (2) கலாசாரம் மற்றும் உயிரியல்
(3) சமயம் மற்றும் கலாசாரம் (4) அரசியல் மற்றும் கலாசாரம்

(20)
- சுடப்பட்ட மட்பாத்திரப் பாவனை
- முறையான மரணச் சடங்கு முறை
- கல்லாயுதங்களுக்குப் பதிலாக இரும்புலோகப் பாவனை ஆரம்பம்.
- நிரந்தர இருப்பிடம் அமைத்தல்.

மேற்கூறப்பட்ட மாற்றங்கள் நிகழ்ந்த காலகட்டத்தைத் தெரிவு செய்க.
(1) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வரலாற்றுக் காலத்தை நோக்கிய மாற்றங்கள் ஆகும்.
(2) முன்வரலாற்றுக் காலத்திலிருந்து வரலாற்றுக் காலத்தை நோக்கிய மாற்றங்கள் ஆகும்.
(3) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து முன்வரலாற்றுக் காலத்தை நோக்கிய மாற்றங்கள் ஆகும்.
(4) வரலாற்றுக் காலத்திலிருந்து நவீன காலத்தை நோக்கிய மாற்றங்கள் ஆகும்.

(21) இலங்கையில் முன்வரலாற்றுக் காலத்தை அறிந்து கொள்ள உதவும் மிக முக்கிய சான்றுகளில் ஒன்று
(1) மெகாதிலிக் மயானம் (2) இரணைமடுப் படிவு
(3) கற்குகைகள் (4) பாவித்த உடைகள்


kalvi.lk

(22) இலங்கையில் ஆரம்ப வரலாற்றுக் காலத்திற்குரிய வாழ்க்கை முறை எவ்வாறானது என்பதை அறிந்து கொள்வதற்கு ஓரளவிற்கேனும் உதவும் சான்று எது?

(1) இப்பன்கடுவ எனும் இடத்தில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சி.
(2) பெரகல பிரதேசத்தில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சி.
(3) பொத்தான எனும் கற்குகையில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சி.
(4) உடரஞ்சாமடம எனும் இடத்தில் கிடைக்கப் பெற்ற குடியிருப்பொன்றின் அகழ்வாராய்ச்சி.

(23) வரலாற்றுக்கால குடியிருப்புக்களில் பெரும்பாலானவை எதனை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்றது?

(1) நதியொன்றை (2) குளமொன்றை
(3) மலையொன்றை (4) கரையோரமொன்றை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றது.

(24) வரலாற்றுக் காலத்தில் மீனவர்கள் வாழ்ந்த கிராமம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

(1) வட்டகீகாம (2) கேவட்டகாம (3) பட்டானகாம (4) கும்பகாரகாம

(25) வரலாற்றுக் காலத்தில் கிராமத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தலைவன் ஒருவன் இல்லத் தலைவர்களில் இருந்தே தெரிவு செய்யப்பட்டார். அவர் யார்?

(1) பருமக (2) கமிக (3) குர்ஹபதி (4) ராஜன்

(26) வரலாற்றுக்கால குடியிருப்புக்கள் நதிக்கரையோரங்களில் அமைக்கத் தொடங்கியமை பற்றிய சான்று எந்நதிக் கரையில் கிடைக்கப் பெற்றது?

(1) கல் ஓயா (2) கிரிந்தி ஓயா (3) தெதுரு ஓயா (4) மல்வத்து ஓயா


(27) நதிப்படுக்கைக்கு அப்பாலான பிரதேசங்களில் குடியிருப்புக்கள் பரவலடையும் போது அங்கு வாழ்ந்தோரது ஜீவனோபாயமாக விளங்கியது எது?

(1) விலங்கு வளர்ப்பு (2) நெல் விவசாயம்
(3) சேனைப் பயிர்ச் செய்கை (4) வர்த்தகம்

(28) பருமக என்பவர் பிரதேசத்தின் நிர்வாக அமைப்பைக் கொண்டிருந்தார் என்பதைக் காண்பிப்பதற்கான கல்வெட்டு எது?

(1) கொத்கல்கந்த கல்வெட்டு (2) கழுதிய பொகுண கல்வெட்டு
(3) கொரவக்கல கல்வெட்டு (4) பெரிய புளியம்குளம் கல்வெட்டு

(29) இது அன்றைய சமூகத்தில் வாழ்ந்த பருமக முதலிய பிரபுக்களால் பயன்படுத்தப்பட்ட கல்லறை மயானம் ஆகும். இதனை இனங்காண்க.



(1) ஹல்துமுல்ல மயானம்
(2) இப்பன்கடுவ மயானம்
(3) கல்சொஹன் மயானம்
(4) ரிடீகல்பொத்த மயானம்

(30)

| | அ | | ஆ |
|---|---|---|---|
| 1. | எம்புல் அம்பே கல்வெட்டு | A. | இல்லத் தலைவர்களிலிருந்து கமிகமார் தெரிவு செய்யப்படல். |
| 2. | மகாவம்சம் | B. | கமிகமார் நெல் மூட்டையொன்றை கடனாகப் பெறல். |
| 3. | ஜானகீகரண | C. | திக்சந்த செனவியா பிரிவெனாவில் எழுதப்பட்டது. |
| 4. | சமந்த பாசாதிகா | D. | போசணி அரசன் |

மேற்கூறப்பட்ட விடயங்களை இணைப்பதனூடாகப் பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

(1) A D C B (2) D C B A (3) D C A B (4) D B A C


kalvi.lk

(31) அரசியல் பலம் மையப்படுத்தப்பட்டபோது நாட்டில் சக்திவாய்ந்த நபராக தோற்றம் பெற்ற நிர்வாகி யார்?

(1) பிராந்திய அரசன் (2) மகா ராஜா
(3) மபறுமுகா (4) அமைச்சர்

(32) தம்புள்ள விகாரையின் பாறைக் கல்வெட்டில் குட்டகண்ண அபய மன்னன் அதில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பெயர் யாது?

(1) பர்வத அரசன் (2) போதிசத்துவர்
(3) நரஇசெர (4) சக்கரவர்த்தி

(33) பின்வரும் கூற்றுக்களுள் தந்தையிடமிருந்து மகனுக்கு அரசுரிமை கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தினை தெரிவு செய்க.

(1) வசப மன்னனின் பின் வங்கநாசிக்க திஸ்ஸ மன்னனுக்கு
(2) தேவநம்பிய திஸ்ஸ மன்னனுக்குப் பின் சூளகத்த மன்னனுக்கு
(3) துட்டகைமுனு மன்னனுக்குப் பின் சத்தாதிஸ்ஸ மன்னனுக்கு
(4) காசியப்ப மன்னனுக்குப் பின் முகலனுக்கு

(34) அரசியல் பலம் மத்தியமயப்படுத்தப்பட்டபோது அரசனுக்கு உதவிய பன அதெக எனும் பெயரால் அழைக்கப்பட்ட நபர் யார்?

(1) அரச செயலகத் தலைவர் (2) வர்த்தக நடவடிக்கைகளுக்கான தலைவர்
(3) நாட்டியப் பிரிவின் தலைவர் (4) காசு அச்சிடும் பிரிவின் தலைவர்

(35) இந்நாட்டு வரலாற்றில் முதலாவது முறையான யுத்த செயற்பாட்டிற்குத் தலைமைத்துவத்தை வழங்கிய மன்னன் யார்?

(1) தேவநம்பியதிஸ்ஸ மன்னன் (2) வலகம்பாகு மன்னன்
(3) துட்டகைமுனு மன்னன் (4) தாதுசேன மன்னன்

(36) வசப மன்னன் எந்த அரச வம்சத்தின் முதல் மன்னன் ஆவான்?

(1) மௌரிய அரச வம்சம் (2) மானவம்ம அரச வம்சம்
(3) பாண்டிய அரச வம்சம் (4) இலம்பகர்ண அரச வம்சம்

(37) பின்வரும் A, B கூற்றுக்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாவுக்கு விடையளிக்க.

A. நிர்வாக அலகுகளாகப் பிரித்து ஆட்சி செய்தல்.
B. மாந்தோட்டை துறைமுகத்தை வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்தல்.

இக்கூற்றுக்களுள் வசப மன்னன் தொடர்பான உண்மையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) A உண்மையானது மற்றும் B உண்மையற்றது.
(2) A யும் B யும் உண்மையானது.
(3) A உண்மையற்றது மற்றும் B உண்மையானது.
(4) A யும் B யும் உண்மையற்றது.

பின்வரும் கூற்றுக்களை அவதானித்து 38, 39ம் வினாக்களுக்கு விடையளிக்க.

A. முதல் முறையாக பாரிய குளங்களை அமைத்தல்.
B. சர்வதேச பிராந்திய தேவைகளுக்கு முகங்கொடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சாதனை.
C. நாட்டின் சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் பாடுபடல்.
D. அரச குடும்பத்திற்கு வழங்கப்பட்ட அடைக்கலத்தின் தன்மை பற்றிய விபரம் பனாகடுவ செப்பேட்டில் குறிப்பிடப்படல்.
E. ருவன்வெலிசாய கட்டப்பட்ட வேளையில் அதன் நாற்றிசை வாயில்களிலும் தானமளிக்க ஏற்பாடு செய்தல்.


kalvi.lk

(38) இக்கூற்றுக்களுள் 1ம் விஜயபாகு மன்னனுடன் சம்பந்தப்பட்ட கூற்றுக்களைத் தெரிவு செய்க.

(1) A யும் B யும் (2) B யும் C யும்

(3) C யும் D யும் (4) D யும் E யும்

(39) வசப மன்னனுடன் சம்பந்தப்பட்ட முக்கியமான கூற்றுக்களைத் தெரிவு செய்க.

(1) A யும் B யும் (2) B யும் E யும்

(3) C யும் D யும் (4) C யும் E யும்

(40) முதலாம் விஜயபாகு மன்னன் அநுராதபுரத்திற்குப் பதிலாக பொலன்னறுவையை தலைநகராக மாற்றியமைக்கு அடிப்படையாக அமைந்த காரணி யாது?

(1) முன்னர் இத்துறைமுகம் ஒரு யுத்தப்பாசறையாக இருந்தமை.

(2) பொலன்னறுவையிலிருந்து உருகுணையினூடாக சீன சவால்களுக்கு முகங்கொடுக்க இலகுவாக இருந்தமை.

(3) சோழர்களை எதிர்த்துப் போராட இலகு என்பதனால்.

(4) பொலன்னறுவையிலிருந்து திருகோணமலைத் துறைமுகத்தினூடாக வர்த்தக நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு வசதியாக இருத்தல்.

( 1 x 40 = 40 புள்ளிகள்)

NWP EXAM
Education கல்வி අධ්‍යාපන

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

33 | T | II

# முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020

# First Term Test - Grade 10 - 2020

## வரலாறு - II

பெயர் : ................................ நேரம் : 03 மணி. 10 நிமி.

**கவனிக்க**

முதலாம் வினா கட்டாயமானது.
பகுதி II இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

### பகுதி I

(01) (அ) பின்வரும் (1) இல் தரப்பட்டுள்ள இடங்களை இலங்கைப் படத்திலும், (2) இல் தரப்பட்டுள்ள இடங்களை உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(1) கிரிந்தி ஓயா, அநுராதபுரம், கோட்டே, மாந்தோட்டை, திருகோணமலை, பாகியங்கல, கலாவாவி, இப்பன்கடுவ, மல்வத்து ஓயா, சீகிரியா, இரணைமடுக்குளம், மாத்தளை (12 புள்ளிகள்)

(2) அரேபியா, சீனா, போர்த்துக்கல், செங்கடல், உரோம், பிரித்தானியா (6 புள்ளிகள்)


(ஆ)(1) பின்வரும் A B C D எனும் எழுத்துக்களினூடாக தரப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளுக்கு ஒழுங்கு முறைப்படி விடை தருக.

(A) மகாவம்சத்தின் முதல் பகுதியை எழுதிய மகாநாம தேரர் வசித்த பிரிவெனா
(B) எதாஹெலதிவ (அன்றைய இலங்கை) எனும் நூலை எழுதிய ஆங்கில இனத்தவர்.
(C) இலங்கையில் மத்திய கற்காலத்திற்குரிய கேத்திரகணித உருவிலான கல்லாயுதங்கள் செய்த கற்பாறை.
(D) பெரும்பான்மையோரின் ஆதரவுடன் நாட்டை நிர்வகிக்கும் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட நிர்வாகி.



(இ)(1) படத்திலுள்ள நபர் யார்?
(2) இவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர் ஆவார்?
(3) இவர் எந்நாட்டை தேசப்படமாக வரைந்தார்?
(4) இவர் வாழ்ந்த நாடு எது?

(4 புள்ளிகள்)



(ஈ) (1) உருவிலுள்ள செதுக்கல் யாது?
(2) இச்செதுக்கல் அமைந்துள்ள விகாரை யாது?
(3) இது எக்காலத்திற்குரியது?
(4) இதனை உருவாக்கிய கடவுள்கள் இருவரும் யாவர்?

(4 புள்ளிகள்)

## பகுதி II

(02) (1) இலங்கை வரலாற்றை அறிந்து கொள்ளக் கூடிய இலக்கிய மூலாதாரமான மகாவம்சத்தை எழுதுவதற்குப் பயன்படுத்திய நூல்கள் மூன்று குறிப்பிடுக.

(2) இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

(3) இலக்கிய மூலாதாரங்களின் பயன்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.

(4) இலங்கை வரலாற்றை அறிந்து கொள்ளக்கூடிய நாணய மூலாதாரங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு இவற்றினூடாக அறிந்து கொள்ளக்கூடிய தகவல்கள் பற்றி விளக்குக.

( 3 + 4 + 5 + 6 = 18 புள்ளிகள்)

(03) (1) இலங்கை பற்றி அறிந்து கொள்ளக்கூடிய தென் இந்திய இலக்கிய மூலாதாரங்கள் மூன்று குறிப்பிடுக.

(2) சாசன மூலாதாரங்கள் எழுதப்பட்டுள்ள சாதனங்கள் நான்கினைப் பெயரிடுக.

(3) இலங்கையில் புராதன கல்வெட்டான பிராமி கல்வெட்டின் முக்கியத்துவங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.

(4) கி.பி. 2ம் நூற்றாண்டு காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுக்களின் முக்கியத்துவங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.

( 3 + 4 + 5 + 6 = 18 புள்ளிகள்)

(04) (1) எமது கலாசார வளர்ச்சியின் வரலாற்றைக் காட்டும் உயிரோட்டமான சாட்சிகள் மூன்றைத் தருக.

(2) பின்வரும் இடங்களில் எழுதப்பட்டுள்ள கருங்கல்லின் அமைப்பிற்கேற்ப கல்வெட்டுக்களை வகைப்படுத்துக.

A - கற்பீலிகளின் மேல் எழுதப்பட்டவை.

B - கற்பாறைகளின் மேல் எழுதப்பட்டவை.

C - செப்பனிடப்பட்ட கருங்கல் தூண்களில் எழுதப்பட்டவை.

D - மலர் ஆசனங்கள் போன்ற பீடங்களில் எழுதப்பட்டவை.

(3) புராதன சிதைவுகள் இலங்கையின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கான சிறந்த மூலாதாரமாகும். இக்கூற்றை இரண்டு காரணிகளினூடாக விளக்குக.

(4) வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.

( 3 + 4 + 5 + 6 = 18 புள்ளிகள்)

(05) (1) பின்வரும் A B C எனும் எழுத்துக்களால் தரப்பட்டுள்ள தகவல்களுக்கு விடையளிக்க.

A - இலங்கையின் அதிவரண்ட வலய நிலத்தினடியில் களிமண்ணுடன் கூடிய மணல் மண்ணினால் மூடப்பட்டுள்ள சரளைப்படிவுகள் அழைக்கப்படும் பெயர்.

B - சுமார் 38000 வருடங்களுக்கு முன் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த வாழ்விடம்.

C - தாழ்நில உலர்வலய குகையொன்று.

(2) பின்வரும் A B C D எனும் எழுத்துக்களால் தரப்பட்டுள்ள தகவல்களுக்குரிய சரியான விடையினை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A - இலங்கையில் கற்காலத்துக்குரிய தொழிநுட்பம் பற்றிய விபரமான அறிவினைப் பெற்றுக் கொள்ள உதவும் கல்லாயுதம்.

B - வரலாற்றுக்கு முற்பட்ட கால சடங்கு சம்பிரதாய முறைகளில் ஒன்றான எலும்புக்கூட்டை எடுத்து மீண்டும் வளைத்துப் புதைக்கப்பட்டமை கண்டெடுக்கப்பட்ட குகை.

C - முன் வரலாற்றுக் காலத்திற்குரிய சப்ரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள மயானம்.

D - முன் வரலாற்றுக்காலம் கட்டியெழுப்பப்படுவதற்கான பின்னணியை உருவாக்கிய புவியில் மாற்றம் நிகழ்ந்த யுகம் அழைக்கப்படுவது.

(நுணுக்கமான கல்லாயுதம், கேத்திர கணித பொறிமுறை வடிவ கல்லாயுதம், குருவிட்ட பட்டதொம்பலேன, உடரஞ்சாமடம, ஹொலோசியன்)


kalvi.lk

(3) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் மரணச்சடங்கு சம்பந்தமான சடங்கு சம்பிரதாயங்கள் நடத்திய இடங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவை இடம்பெற்ற முறை பற்றி விளக்குக.

(4) முன் வரலாற்றுக் காலத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வேறுபடுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

( 3 + 4 + 5 + 6 = 18 புள்ளிகள்)

(06) (1) முன் வரலாற்றுக் காலத்தில் இரும்பைப் பயன்படுத்தி மேற்கொண்ட விவசாயம் சார்ந்த நடவடிக்கைகள் மூன்று தருக.

(2) வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் நான்கு குறிப்பிடுக.

(3) வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் கட்டமைப்பும் தன்மையும் பற்றிய அடிப்படையாக அமைந்த காரணிகள் இரண்டினை உதாரணங்களுடன் குறிப்பிட்டு விளக்குக.

(4) வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் ஒழுங்கமைப்பும் நிர்வாகமும் கட்டுக்கோப்புடன் திகழ்ந்தன என்பதை குர்ஹபதி, தசகம் எத்தன் என்பவர்களின் நடவடிக்கைகளினூடாக விளக்குக.

( 3 + 4 + 5 + 6 = 18 புள்ளிகள்)

(07) (1) புராதன கிராமங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு அமைந்திருந்தமை பின்வருமாறு. இக்கிராமத்தில் வாழ்ந்த மக்கள் இவ்வேறுபாட்டை குறிப்பிட்ட விதத்தினை முன்னால் எழுதுக.

A - எங்களது ஊர் B - அடுத்த ஊர்கள் C - வெளி ஊர்கள்

(2) கமிகவினால் நிறைவேற்றப்பட்ட விடயங்கள் நான்கு தருக.

(3) சர்வதேச வர்த்தகத்தில் தொடர்புபடும் போது முழு நாடும் ஒரே நிர்வாகத்தில் வந்ததாக வேண்டி தேவநம்பிய திஸ்ஸ மன்னன் மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(4) அரச அதிகாரம் மத்தியமயப்படுத்தப்பட்டபோது பண்டுகாபய மன்னன் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

( 3 + 4 + 5 + 6 = 18 புள்ளிகள்)

(08) (1) அரசியல் பலம் மத்தியமயப்படுத்தப்பட்டபோது அரசர்கள் தோற்றம் தர விரும்பிய எண்ணக்கருக்கள் மூன்று தருக.

(2) புராதன இலங்கையில் அரசுரிமை கிட்டிய விதங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(3) துட்டகைமுனு மன்னன் மகாராஜவாக மகுடம் சூட்டப்பட்ட பின் மக்களின் நலனோம்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை தொடர்பான காரணிகள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக.

(4) வசப மன்னன் உள்நாட்டு நிர்வாகத்தை முறையாகக் கட்டியெழுப்புவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

( 3 + 4 + 5 + 6 = 18 புள்ளிகள்)

(09) (1) அரசியல் பலம் மத்தியமயப்படுத்தப்பட்ட பின்னர் உருவான அரச அதிகாரிகள் பின்வருமாறு. இவ் அதிகாரிகளின் பதவிகள் யாவை என்பதை எழுதுக.

A - கொதுறு கேனா B - பதகு C - நகரவடிக

(2) வசப மன்னன் பௌத்த மத வளர்ச்சிக்கு ஆற்றிய சேவைகள் நான்கைக் குறிப்பிடுக.

(3) 1ம் விஜயபாகு மன்னன் சோழர்களிடமிருந்து நாட்டை மீட்டிக் கொள்ள திட்டமிட்டு செயற்பட்ட விதம் பற்றி இரண்டு காரணிகளினூடாக விளக்குக.


(4) 1ம் விஜயபாகு மன்னன் பொலன்னறுவையைத் தனது தலைநகராகத் தெரிவு செய்தமைக்குச் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

( 3 + 4 + 5 + 6 = 18 புள்ளிகள்)



01. (අ) (i)
01. (அ) (i)
01. (a) (i)

01. (අ) (i)
01. (அ) (i)
01. (a) (i)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457